பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
14 07 2024 **SUNDAY** 7 15 **AM**
வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. திறன் மேம்பாட்டிற்கும் வேலைவாய்ப்பிற்கும் அரசு முன்னுரிமை அளித்து வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்..

2. உணவு பதப்படுத்துதல் தொழிலில் உள்ள ஏராளமான வாய்ப்புகளை இந்திய நிறுவனங்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று மத்திய உணவு பதப்படுத்துதல் துறை அமைச்சர் திரு. சிராக் பாஸ்வான் கூறியுள்ளார்.

3. அஸ்ஸாம் மாநிலத்தில் மழை மற்றும் வெள்ளத்தால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 91ஆக அதிகரித்துள்ளது

4. அமெரிக்க முன்னாள் அதிபர் திரு. டொனால்டு ட்ரம்ப் பங்கேற்ற பொதுக்கூட்டத்தில் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக தீவிர விசாரணை நடைபெற்று வருவதாக அந்நாட்டு பாதுகாப்புத்துறை தெரிவித்துள்ளது.

5. ஹராரேயில் நடைபெற்ற நான்காவது டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியில், இந்தியா 10 விக்கெட் வித்தியாசத்தில் ஜிம்பாப்வேயை வென்றது.

<<<<>>>>>

கடந்த நான்காண்டுகளில் மத்திய அரசு 8 கோடி புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கியுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

மும்பை, கோரேகான் புறநகரில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் புதிய திட்டங்களை தொடங்கி வைத்துப் பேசிய அவர், வேலைவாய்ப்பு குறித்த சமீபத்திய இந்திய ரிசர்வ் வங்கியின் அறிக்கையை சுட்டிக்காட்டினார்.

நாட்டில் வேலையின்மை நிலவுவதாக தவறான தகவல்களை பரப்பியவர்கள் தற்போது அமைதியாக இருப்பதாக அவர் குற்றம் சாட்டினார்.

நாட்டிற்கு தற்போது திறன் மேம்பாடு மற்றும் வேலைவாய்ப்பு மிகவும் அவசியம் என்றும், அதனை உருவாக்கும் வகையில் அரசு செயல்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

நாட்டின் ஸ்திரத்தன்மைக்கும், வளர்ச்சிக்கும் தேசிய ஜனநாயக கூட்டணி அரசு முக்கியத்துவம் அளிப்பதாகவும், எனவே மூன்றாவது முறையாக பதவியேற்றுள்ள தேசிய ஜனநாயக கூட்டணி அரசை சிறு மற்றும் பெரிய முதலீட்டாளர்கள் வரவேற்பதாகவும் பிரதமர் பெருமிதத்துடன் கூறினார்.

மும்பையில் நேற்று பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்ட பிரதமர், இந்திய பத்திரிகை சங்கத்தின் புதிய கட்டிடத்தை திறந்து வைத்து அவர் பேசினார்.

மக்களுக்கான நலத்திட்டங்களை செயல்படுத்தும் அரசுக்கு ஆதரவாக ஊடகங்கள் செயல்பட வேண்டும் என்று அப்போது அவர் கேட்டுக் கொண்டார்.

மத்திய அரசு மேற்கொண்டுள்ள சுற்றுச்சூழல் பாதுகாப்பு முன்முயற்சிகளை உலக நாடுகள் பாராட்டுவதாகவும், இதுபோன்ற முன்முயற்சிகளை மிகப் பெரிய இயக்கமாக மாற்ற ஊடகங்கள் அரசுக்கு உதவ வேண்டும் என்றார்

வளர்ச்சியடைந்த பாரதத்தை உருவாக்கும் அரசின் முயற்சிகளுக்கு பக்கபலமாக ஊடகங்கள் திகழ வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

இந்தியாவில் உள்ள பல்வேறு ஊடகங்கள், டிஜிட்டல் பதிப்பை கொண்டுள்ளதை சுட்டிக்காட்டிய திரு. நரேந்திர மோடி, சர்வதேச பிரச்சினைகளில் இந்தியாவின் நிலைப்பாட்டை தெரிவிக்க சர்வதேச மொழிகளிலும் பதிப்புகளை தொடங்க வேண்டும் என்று பத்திரிகை நிறுவனங்களை கேட்டுக் கொண்டார்..

<<<<>>>>

பாதுகாப்பான டிஜிட்டல் தொழில்நுட்பம் புதுமைகளை ஊக்கப்படுத்துவதாகவும், முதலீடுகளை ஈர்ப்பதாகவும் குடியரசு துணைத்தலைவர் திரு. ஜெக்தீப் தங்கர் கூறியுள்ளார்.

புதுதில்லியில் நேற்று பயங்கரவாத எதிர்ப்பு குறித்த சர்வதேச கவுன்சில் ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், தடையற்ற பொருளாதார நடவடிக்கைகளை டிஜிட்டல் தொழில்நுட்பம் எளிதாக்குவதாக கூறினார்.

பெருகி வரும் இணையதள குற்றங்களுக்கு எதிரான நடவடிக்கைகளை வலுப்படுத்துவதோடு, பாதுகாப்பான இணைய பயன்பாடு குறித்த கலாச்சாரத்தையும் மக்களிடம் ஊக்கப்படுத்த வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

இணையதளம் மூலமாக வரும் சவால்களை வாய்ப்புகளாக மாற்ற வேண்டும் என்றும் அவர் கூறினார்.

நாட்டில் கடந்த சில ஆண்டுகளாக மத்திய அரசு மேற்கொண்ட முயற்சியால், 50 கோடிக்கும் அதிகமான மக்கள் வங்கி சேவையின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

உலக அளவில் நடைபெறும் டிஜிட்டல் பரிவர்த்தனையில் 50 விழுக்காடு பரிவர்த்தனைகள் இந்தியாவில் நடைபெறுவதாகவும் திரு. ஜெக்தீப் தங்கர் கூறினார்.

<<<<>>>>>

உணவு பதப்படுத்துதல் தொழிலில் உள்ள ஏராளமான வாய்ப்புகளை இந்திய நிறுவனங்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று மத்திய உணவு பதப்படுத்துதல் துறை அமைச்சர் திரு. சிராக் பாஸ்வான் கூறியுள்ளார்.

புதுதில்லியில் நேற்று உணவு பதனிடுதல் துறையின் எதிர்கால திட்டங்கள் குறித்து நடைபெற்ற கலந்துரையாடல் நிகழ்ச்சியில் பங்கேற்றுப் பேசிய அவர், புதுதில்லியில் வரும் செப்டம்பர் மாதம் நடைபெறவுள்ள உணவு பதப்படுத்தும் தொழில் குறித்த சர்வதேச மாநாட்டில் பங்கேற்குமாறு நிறுவனங்களுக்கு அழைப்பு விடுத்தார்.

உணவுத்துறையில் உலக அளவில் மேற்கொள்ள வேண்டிய சீர்திருத்த நடவடிக்கைகள் குறித்து விவாதிக்க செப்டம்பர் மாதம் நடைபெறவுள்ள உலக உணவு ஒழுங்காற்று உச்சிமாநாட்டிலும் இந்திய நிறுவனங்கள் பங்கேற்க வேண்டும் என்று அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

<<<<>>>>>

கள்ளச்சாராய உயிரிழப்பு மற்றும் சென்னையில் பகுஜன் சமாஜ் கட்சியின் மாநிலத் தலைவர் ஆம்ஸ்ட்ராங் படுகொலை ஆகியவற்றால் தமிழக அரசு, ஷெட்யூல்டு வகுப்பு மக்களின் கோபத்திற்கு ஆளாகியுள்ளதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன் கூறியுள்ளார்.

சென்னையில் நேற்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், கள்ளக்குறிச்சியில் கள்ளச்சாராயம் அருந்தி உயிரிழந்தவர்களில் பாதிக்கு மேற்பட்டோர் ஷெட்யூல்டு வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்று கூறியுள்ளார்.

மாநிலத்தின் பல்வேறு இடங்களில் போதைப் பொருட்களின் புழக்கம் அதிகமாகியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

சென்னையில் பகுஜன் சமாஜ் கட்சியின் மாநிலத் தலைவர் ஆம்ஸ்ட்ராங் படுகொலை சம்பவம், மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு மிகவும் மோசமான நிலையில் இருப்பதை எதிரொலிப்பதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழகத்தில் பல்வேறு ஊராட்சிகளில் ஷெட்யூல்டு வகுப்பைச் சேர்ந்த தலைவர்கள் நாற்காலியில் கூட அமர முடியாத நிலை உள்ளதாகவும், இதுகுறித்து திமுகவின் கூட்டணி கட்சியான மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆய்வு நடத்தி அறிக்கை வெளியிட்டுள்ளதாகவும் திரு. எல். முருகன் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>>

அஸ்ஸாம் மாநிலத்தில் மழை மற்றும் வெள்ளத்தால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 91ஆக அதிகரித்துள்ளது

பலத்த மழையால், பிரம்மபுத்திரா மற்றும் அதன் கிளை நதிகளில் வெள்ளம் அபாய கட்டத்தை தாண்டி ஓடுகிறது.

அஸ்ஸாம் மாநிலத்தில் வெள்ளத்தால் 75 வருவாய் வட்டங்களுக்கு உட்பட்ட 2 ஆயிரத்து 400 கிராமங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

வெள்ளத்தால் சூழப்பட்ட வீடுகளிலிருந்து சுமார் 3 லட்சம் பேர் மீட்கப்பட்டு, 316 நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களுக்குத் தேவையான உணவு மற்றும் அடிப்படை வசதிகளை மாநில அரசு செய்து தந்துள்ளது.

வெள்ளம் காரணமாக, காசிரெங்கா தேசிய பூங்காவில் இதுவரை 10 காண்டாமிருகங்கள் உட்பட 180 வன விலங்குகள் உயிரிழந்துள்ளதாக பூங்கா நிர்வாகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>>

அமெரிக்க முன்னாள் அதிபர் திரு. டொனால்டு ட்ரம்ப் பங்கேற்ற பொதுக்கூட்டத்தில் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக தீவிர விசாரணை நடைபெற்று வருவதாக அந்நாட்டு பாதுகாப்புத்துறை தெரிவித்துள்ளது.

பென்சில்வேனியா மாகாணத்தில் நேற்று நடைபெற்ற அதிபர் தேர்தல் பிரச்சாரத்தில் குடியரசுக் கட்சி வேட்பாளர் திரு. ட்ரம்ப் கலந்து கொண்டு உரையாற்றினார்.

அப்போது திடீரென கூட்டத்தில் இருந்த நபர் ஒருவர் ட்ரம்பை நோக்கி துப்பாக்கியால் சுட்டதாகவும், இதனால் அவரது காதில் ரத்தக்காயம் ஏற்பட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதையடுத்து, பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த பாதுகாவலர்கள் அவரை, பாதுகாப்பாக மீட்டு கொண்டு சென்றதாகவும் அவர் நலமுடன் இருப்பதாகவும் அமெரிக்க பாதுகாப்புத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த துப்பாக்கிச் சூடு சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்ததை அடுத்து, துப்பாக்கிச் சூடு நடத்திய நபர் பாதுகாப்புப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

துப்பாக்கிச் சூடு சம்பவத்திற்கு அதிபர் திரு. ஜோ பைடன் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுபோன்ற வன்முறைகளுக்கு அமெரிக்காவில் இடமில்லை என்றும் சமூகவலைதளப் பதிவில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>>

ஜம்மு காஷ்மீரில் துணை நிலை ஆளுநருக்கான அதிகாரங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இதற்காக மத்திய அரசு ஜம்மு காஷ்மீர் மறுசீரமைப்பு சட்டத்தில் திருத்தங்களை செய்துள்ளது.

இந்த திருத்தங்கள் அரசிதழில் வெளியான தேதியிலிருந்து அமலுக்கு வந்துள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

காவல்துறை மற்றும் அரசு நிர்வாகத்தில் அதிகாரிகள் நியமனம், அவர்களின் பணியிட மாற்றம் தொடர்பாக முடிவெடுக்க இந்த சட்டத்திருத்தம் துணைநிலை ஆளுநருக்கு கூடுதல் அதிகாரத்தை வழங்குகிறது.

தவறு இழைக்கும் காவல் மற்றும் பொதுநிர்வாக அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு முன்பு, லஞ்ச ஒழிப்புத்துறை ஜம்மு காஷ்மீர் நிதித்துறையின் அனுமதியை பெறவேண்டியிருந்தது.

இனி, தலைமைச்செயலர் வாயிலாக, துணை நிலை ஆளுநரின் நேரடி ஒப்புதலை பெற்று நடவடிக்கை எடுக்க இந்த சட்டத்திருத்தம் மூலம் வகை செய்யப்பட்டுள்ளது.

<<<<>>>>

இந்தியா - ஜிம்பாப்வே அணிகளுக்கு இடையிலான ஐந்தாவது மற்றும் கடைசி டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறவுள்ளது.

ஹராரேயில் நடைபெறவுள்ள இப்போட்டி மாலை மணி 4.30-க்கு தொடங்குகிறது.

முன்னதாக நேற்று நடைபெற்ற நான்காவது டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியில், இந்தியா 10 விக்கெட் வித்தியாசத்தில் ஜிம்பாப்வேயை வென்றது.

முதலில் விளையாடிய ஜிம்பாப்வே நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 7 விக்கெட் இழப்புக்கு 152 ரன் எடுத்தது.

153 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் விளையாடிய இந்தியா, 15 புள்ளி இரண்டு ஓவரில் விக்கெட் இழப்பின்றி 156 ரன் எடுத்து வெற்றி பெற்றது.

<<<<>>>>

ஹங்கேரியில் வரும் செப்டம்பர் மாதம் நடைபெறவுள்ள ஒலிம்பியாட் செஸ் போட்டியில் இந்தியாவின் சார்பில் குகேஷ், பிரக்ஞானந்தா உள்ளிட்ட முன்னணி செஸ் வீரர்கள் பங்கேற்கின்றனர்.

<<<<>>>>

லண்டனில் நடைபெற்ற விம்பிள்டன் டென்னிஸ் போட்டியில் மகளிர் ஒற்றையர் பிரிவு பட்டத்தை செக்குடியரசின் பார்பரா **Krejcikoba** வென்றுள்ளார்.

நேற்று நடைபெற்ற இறுதிப்போட்டியில், அவர் இத்தாலியின் **Jasmine Paolini**-யை 6-2, 2-6, 6-4 என்ற செட்கணக்கில் வீழ்த்தினார்.

<<<<>>>>

**Copa** அமெரிக்க கால்பந்து பந்து இறுதிப்போட்டியில் அர்ஜென்டினா - கொலம்பியா அணிகள் மோதுகின்றன

<<<<>>>>

தமிழ்நாடு ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில், கோவை அணி 9 விக்கெட் வித்தியாசத்தில் நெல்லை அணியை வென்றது.

முதலில் விளையாடிய நெல்லை அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 7 விக்கெட் இழப்புக்கு 167 ரன் எடுத்தது.

168 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய கோவை அணி, 18 புள்ளி 3 ஓவரில் ஒரு விக்கெட் இழப்பிற்கு 172 ரன் எடுத்து வெற்றிபெற்றது.

கோவையில் இன்று மாலை மணி 3.15க்கு நடைபெறவுள்ள போட்டியில் சேலம் அணி – திருச்சி அணியையும், இரவு ஏழே கால் மணிக்கு நடைபெறவுள்ள மற்றொரு போட்டியில் சேப்பாக்கம் அணி – திண்டுக்கல் அணியையும் எதிர்கொள்கின்றன.

**<<<<END>>>>**